# பத்திரிக்கைச் செய்தி.

2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் மின்கம்பியாளர் தகுதிகாண் தேர்வு (Wireman Helper Competency Examination) நடைபெறவுள்ளது. இது குறித்து தகுதி வாய்ந்த கம்பியாள் உதவியாளர்களிடமிருந்து இத்துறையால் நடத்தப்பட்ட தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்பில் மின் கம்பியாள் பிரிவில் பயிற்சி பெற்று தேறியவர்களிடமிருந்து மற்றும் தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இத்துறையால் நடத்தப்பட்ட மின்சாரப்பணியாளர் மற்றும் கம்பியாள் தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி – விண்ணப்பதாரர் மின் ஒயரிங் தொழிலில் 5 வருடங்களுக்கு குறையாமல் அனுபவம் உள்ளவராகவும் விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். அதிக பட்ச வயது வரம்பு இல்லை.

இத்தேர்விற்குரிய விண்ணப்ப படிவம் மற்றும் விளக்க குறிப்பேட்டினை தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இருந்தும் ரூ.10.:.- ரொக்கமாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேர்வு மையங்களாக உத்தேசிக்கப்பட்டுள்ள வடசென்னை, கோயமத்தூர், சேலம், நாமக்கல், கடலூர், கரூர், பெரம்பலூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, நாகர்கோவில், அம்பத்தூர், செங்கற்பட்டு, ஒசூர், ஈரோடு, திருச்சி, உளுந்தூர்பேட்டை, தஞ்சாவூர், மதுரை, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, வேலூர், திருவண்ணாமலை, குன்னூர், அரியலூர், நீடாமங்கலம், நாகப்பட்டினம், இராமநாதபுரம், திருநெல்வேலி, சிவகங்கை, திருப்பூர், தர்மபுரி ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை விண்ணப்பதாரரே தேர்வு செய்து அத்தேர்வு மையத்திற்கு அனுப்ப வேண்டும்.

போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் மேற்கண்ட தேர்வு மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் அருகிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கு மாமறுதல் செய்யப்பட்டு, அங்கு தேர்வுகள் நடைபெறும். தேர்வு மையம் இறுதி செய்வது தொடர்பாக துறை தலைவரின் முடிவே இறுதியானது. மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மேற்கண்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு 26.07.2019-க்கு கிடைக்குமாமறு அனுப்ப வேண்டும் என அரியலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் திரு.என்.நாகராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.